தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

ந.க. எண் 26417/இ மற்றும் டி பிரிவு/இ1/2023 நாள் 03.11.2023

*********

பொருள் : தொடக்கக் கல்வி இயக்ககம் – அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களின் சார்பாக பணிவரன்முறை / தகுதிகாண் பருவம் முடித்தல் / தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுதல் – துரித நடவடிக்கை மேற்கொண்டு ஆணை வழங்கக் கோருதல் - சார்ந்து.

பார்வை : 1. தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரைகள் நாள்.01.11.2023.

2. சென்னை-6, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.30428/ஐ1/2022, நாள்.09.12.2022.

*********

தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி மற்றும் அரசு தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன, அதில் பணியாற்றும் அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கான பணிவரன்முறை செய்தல் / தகுதிகாண் பருவம் முடித்தல் / தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை வழங்குதல் போன்ற நிர்வாக பணிகள் சார்ந்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களால் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் சில மாவட்டங்களில் மேற்காண் செயல்பாடுகளில் காலதாமதம் ஏற்படுவதாகவும், குறிப்பிட்ட காலத்தில் உரிய ஆணைகள் வழங்கப்படவில்லை என்றும், நீண்ட காலதாமதம் ஏற்படுவதாகவும் பல்வேறு புகார்கள் இவ்வியக்ககத்தில் பெறப்பட்டு வருகிறது.

தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணி நியமனங்கள் செய்து 10 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கு நீண்ட நாட்களாக பணிவரன்முறை / தகுதிகாண் பருவம் முடிக்கப்படவில்லை என ஆசிரியர்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. எனவே சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட பணிகளில் தனிக்கவனம் செலுத்தி, ஆசிரியர்களுக்கான பணிவரன்முறை செய்தல் / தகுதிகாண் பருவம் முடித்தல் / தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை வழங்குதல் போன்றவற்றிற்கான கருத்துருக்களை பரிசீலனை செய்து அதற்கான ஆணைகளை எவ்வித புகார்களுக்கும் இடமளிக்கா வண்ணம் உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(த.பி.பா)

இந்நிகழ்வில் பல்வேறு காரணங்களுக்காக ஆசிரியர்களுக்கான பணிவரன்முறை செய்தல் / தகுதிகாண் பருவம் முடித்தல் / தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை வழங்குதல் போன்றவற்றில் ஆணை வழங்க இயலாத நிலை இருப்பின், என்ன காரணத்திற்காக மேற்கண்டவற்றை செயல்படுத்த இயலாத நிலை உள்ளது என்பதை குறிப்பிட்டு விரிவான கருத்துருவினை சம்மந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெற்று அதனை தொகுத்து மாவட்ட அளவில் 24.11.2023 மாலை 5.00 மணிக்குள் இணை இயக்குநரின் (நிர்வாகம்) பெயரிட்ட உறையின் மூலம் அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் தங்கள் மாவட்டத்தில் இவ்வாறான நிகழ்வு ஏதுமில்லை எனில் "இன்மை அறிக்கையினை" சமர்ப்பிக்குமாறும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் (தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பார்வை 2-ல் காணும் செயல்முறைகளில் இது குறித்து ஏற்கனவே கூடுதல் கடமைகள் மற்றும் பொறுப்புகளுக்கான தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு – பார்வை 2-ல் காணும் கடித நகல்
மற்றும் இணைப்புடன்

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்

அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.